3. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்

(அ) காஞ்சிபுரம், புற்றுநோய்க்கான மேன்மைமிகு மையம் ஏற்படுத்துதல், ஈரோடு அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையை உயர் சிறப்பு மருத்துவமனையாக மேம்படுத்துதல், விபத்துகளில் தலைக்காயம் அடையும் நபர்களைக் காக்க மாவட்டந்தோறும் தீவிர சிகிச்சை மையம் அமைத்தல், சென்னை, கே.கே. நகர் அரசு புனர்வாழ்வு மருத்துவமனையில் இயன்முறை சிகிச்சை அளிக்க மறுவாழ்வு மையம் அமைத்தல், ஆத்தூரை தலைமையிடமாகக் கொண்டு புதிய சுகாதார மாவட்டம் ஏற்படுத்துதல், அரசு மருத்துவமனைகளை 'எனது மருத்துவமனை; எனது பெருமை' என்ற பெயரில் மேம்படுத்துதல் உள்ளிட்டவை பற்றிய மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, புதுப்புது சுகாதாரத் திட்டங்களைச் செயல்படுத்தி மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டியாக விளங்கிவருகிறது. மக்களுக்கு மேலும் தரமான மருத்துவ சேவைகள் கிடைத்திடும் வகையில், நடப்பாண்டில் பின்வரும் புதிய திட்டங்களை இம்மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்:*

1. காஞ்சிபுரம் மாவட்டம், காரப்பேட்டை அரசு அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் மருத்துவமனையில் புற்று நோய்க்கான மேன்மைமிகு மையம் ஒன்று (Centre of Excellence) *120 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.* (*மேசையைத் தட்டும் ஒலி*)

2. நோய்த் தடுப்பு, நோய் குறைத்தல், வலி நிவாரணம், புனர்வாழ்வு, சிகிச்சை தரம் உயர்த்துதல் போன்ற 12 ஒருங்கிணைந்த சுகாதார சேவைகள் வழங்குவதற்காக, மாநிலத்தில் உள்ள கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார

2019 ஜூலை 17] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

நிலையங்கள், 105 கோடி ரூபாய் செலவில் நலவாழ்வு மையங்களாக மாற்றி அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

3. "அனைவருக்கும் நலவாழ்வு" திட்டத்தின்கீழ், 296 துணை சுகாதார மையங்களுக்கு 79 கோடியே 93 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய கட்டடங்கள் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

4. ஈரோடு அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் நரம்பியல் பிரிவு, இருதய நோய் சிகிச்சைப் பிரிவு, புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு, கண் சிகிச்சைப் பிரிவு, குழந்தைகள் நல அறுவை சிகிச்சைப் பிரிவு, பிளாஸ்டிக் அறுவை சிகிச்சைப் பிரிவு, தீக்காய சிகிச்சைப் பிரிவு, சிறுநீரக சிகிச்சைப் பிரிவு, சீமாங்க் பிரிவு போன்ற உயர் சிறப்பு சிகிச்சை அளிக்க, 67 கோடியே 76 இலட்சம் ரூபாய் செலவில் உயர் சிறப்பு மருத்துவமனையாக (Super Speciality Hospital) மேம்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

5. விபத்துகளில் தலைக்காயம் அடையும் நபர்களைக் காக்க, விபத்து நடந்த முதல் ஒரு மணி நேரம் பொன்னான நேரமாகக் கருதப்படுகிறது. இந்தக் காலத்தில் உரிய முதலுதவியும், சிகிச்சையும் அளிக்கப்பட்டால், இறப்புகளைத் தவிர்க்கலாம். அந்தவகையில், தமிழ்நாடு விபத்து மற்றும் அவசர சேவைத் திட்டத்தின்கீழ், 32 மாவட்டங்களில் தலா ஒரு மருத்துவமனைவீதம், பல்வகைக் காயங்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக உலகத் தரம் வாய்ந்த ஒரு தீவிர சிகிச்சை மையம் (Multi-Disciplinary Critical Care Unit) 49 கோடியே ஒரு இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

6. விபத்திற்குப் பின் சிகிச்சை பெறும் நோயாளிகள் மற்றும் நாள்பட்ட நோயாளிகளுக்கு இயன்முறை சிகிச்சை அளிப்பதற்காக சென்னை கே.கே. நகர் அரசு புனர்வாழ்வு மருத்துவமனையில் வளர்ந்த நாடுகளுக்கு இணையாக நவீன வசதிகள் மற்றும் நவீன உபகரணங்களுடன் 40 கோடி ரூபாய் செலவில் மறுவாழ்வு மையம் (Rehabilitation Centre) ஏற்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–05

7. புற்றுநோய் சிகிச்சைக்காக சேலம் மாவட்டம், அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு, நடப்பாண்டில் ஒரு லீனியர் ஆக்ஸலரேட்டர் கருவி (Linear

Accelerator) *16 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்படும்.* (மேசையைத் தட்டும் ஒலி)

8. தற்கொலைகளால் ஏற்படும் இறப்புகளைத் தடுப்பதற்காக 22 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் கட்டணமில்லா '104' *தொலைபேசி சேவை வழியாக ஆலோசனை வழங்கும் மையம், 6 கோடியே 72 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.* (மேசையைத் தட்டும் ஒலி)

9. சேலம் சுகாதார மாவட்டம், மக்கள் தொகையிலும், பரப்பளவிலும் பெரிய மாவட்டமாக உள்ளது. எனவே, சேலம் சுகாதார மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, ஆத்தூரை தலைமையிடமாகக் கொண்டு, ஒரு புதிய சுகாதார மாவட்டம் ஏற்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

10. காச நோய், நீரிழிவு நோய் மற்றும் உயர் இரத்த அழுத்த நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருந்துகள் எளிதில் கிடைப்பதை உறுதி செய்வதற்காக 23 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் சென்னை பெருநகர மாநகராட்சியில் உள்ள 5 நகர்ப்புற சுகாதார மையங்களில் புதிய முயற்சியாக, 28 வகையான மருந்துகள் வழங்கும் 32 தானியங்கி இயந்திரங்கள் (Automatic Drug Vending Machine) *80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.*

11. அரசு மருத்துவமனைகளின் சேவையை மேலும் மேம்படுத்தும் விதத்தில், ஒரு புதிய முயற்சியாக, ஆர்வமுள்ள தொழில் நிறுவனங்களின் சமூகப் பங்களிப்புடன் 'எனது மருத்துவமனை; எனது பெருமை' (My Hospital, My Pride) *என்ற பெயரில் அரசு மருத்துவமனைகள் புதுப் பொலிவுடன் செயல்படும் வகையில் நடவடிக்கை தொடங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.* (மேசையைத் தட்டும் ஒலி)

(ஆ) நடப்பாண்டில் 2,000 புதிய பேருந்துகள் அறிமுகம் மற்றும் அரசுப் போக்குவரத்துக் கழகப் பணிமனைகளைத் தரமுயர்த்தி நவீனப்படுத்துதல் தொடர்பான போக்குவரத்துத் துறை குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்து போக்குவரத்துத் துறை.*